2. அறிவிப்பு

அ. பேரவை அலுவலில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே, பேரவைக்கு அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல்கள் செய்யப் படுகின்றன:—

(1) 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

21—மீனளம்

35—நுகர்பொருள் வழங்கல்

(2) 24–7–1980 வியாழக்கிழமையன்று எடுத்துக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்த கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் 28–7–1980 திங்கட்கிழமையன்று எடுத்துக் கொள்ளப்படும்.

36 —பாசனம்

50—பாசனம் குறித்த மூலதனச் செலவு

3. தகவல் கோரல்

நாடாளு மன்ற உறுப்பினர் திரு. தினேன் பட்டாச்சாரியா மரணம்—விடுமுறை அளிப்பது

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சுதந்திரப் போராட்ட வீரர், தொழிற்சங்க முன்னணித் தலைவர், தினேன் பட்டாச்சாரி, எம். பி., இறந்திருக்கிறார்கள். சஞ்சய் காந்திக்கு விடுமுறை விட்டதுபோல் இவருக்கும் விடுமுறை விடப்படுமா? இவர் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இறந்தவருக்கு அஞ்சலி செலுத்துவதை மனதால் செலுத்த வேண்டும். ஒவ்வொருவருக்கும் விடுமுறை விட்டுக் கொண்டே இருந்தால் விடுமுறைவிட நாளே இருக்காது. தினேன் பட்டாச்சாரிக்கு உண்மையிலேயே மரியாதை செலுத்தவேண்டுமென்றால் அவர்கள் இறந்த நாளில் அதிகமான வேலை செய்ய வேண்டும். மறைந்த பட்டாச்சாரி அவர்கள் சாகிற வரை ஓயாது ஒழியாது உழைத்தவர்.

*குறிப்பு.—[ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]